# Principal District Munsif Court, Sankarankovil.

தேதி : 25.08.2022
அ.வ.எண். 362/2015
வா.சா.1

<u>வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாண வாக்குமூலத்தின்பேரில் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> :–

நான் செய்துள்ள வழக்கில் 1ம் பிரதிவாதியின் கணவர் பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியிருக்கிறேன். 2ம் பிரதிவாதியின் தந்தை நான்தான் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லியிருக்கிறேன். 1ம் பிரதிவாதி எனது மனைவி என்பதையும் 2ம் பிரதிவாதி எனது மகன் என்பதையும் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியும் நானும் இடப்பிரச்சினை சம்மந்தமாக சாமுவேல் என்பவர் மீது வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் வீட்டிற்கு கிழக்கு பக்கம் சார்லேயா என்பவர் வீடு இருக்கிறது என்றால் சரிதான். சார்லேயா வீட்டிற்கு அடுத்து சாமுவேல் வீடு உள்ளது என்றால் சரிதான். சாமுவேல் வீட்டிற்கு பக்கத்தில் தென்வடலாக ரோடு உள்ளது அது சம்மந்தமாக எங்ககளுக்கு பிரச்சினை உள்ளது என்றால் சரிதான் .அந்த பாதை சம்மந்தமாக 1ம் பிரதிவாதியும் நானும் வழக்கு தொடர்ந்தோம் என்றால் சரிதான். மேற்சொன்ன பாதைக்கு கிழக்கு பக்கம் மாரியம்மாள் என்பரின் இடம் உள்ளது என்றால் சரிதான். மாரியம்மாள் வீட்டிற்கு பக்கத்தில் குளம் உள்ளது என்றால் சரிதான். குளத்தின் கரையிலிருந்து பிரதிவாதியின் வீட்டின் பின்புறம் வரை காம்பவுண்ட் சுவர் உள்ளது என்றால் சரிதான். சாலையா என்பவர் வீட்டுக்கு பின்புறத்தில் பிரதிவாதிகள் மாடு கட்டி வருகிறார்கள் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் வீட்டின் பின்புறத்திலிருந்து 1ம் தபசில் சொத்து வரை காம்பவுண்ட் சுவர் உள்ளது என்றால் சரியல்ல.1ம் தபசில் சொத்திற்கும் அதற்கு மேற்குபக்கமுள்ள இடத்திற்கும் பிரித்து காட்டும் வகையில் வரப்பு இல்லை என்பதை நிரூபிக்க நீதிமன்ற ஆணையர் நியமித்து பார்த்தால் தெரியும் என்றால் சரியல்ல. 1ம் தபசில் சொத்தில் நான் அனுபவத்தில் இருந்திருந்தால் பூமிக்கடியில் குழாய் பதிப்பதற்கு அனுமதி கொடுத்திருக்க மாட்டேன் என்றால் சரியல்ல பிரதிவாதிகள் குழாய் எதுவும் பதிக்கவில்லை. அவ்வாறு குழாய் பதித்திருந்தார்களா இல்லையா என்பதை பார்ப்பதற்கு நீதிமன்ற ஆணையர் நியமித்து பார்வையிடுவதற்கு

ஆட்சேபணை இல்லை என்றால் எனக்கு ஆட்சேபணை இல்லை. ரவி கல்யாணசுந்தரம் இந்த வழக்கிற்கு அவசிய கட்சி என்பதனால் அவரை சேர்க்காமல் இந்தவழக்கை தாக்கல் செய்துள்ளது நிலைநிறுத்ததக்கதல்ல என்றால் சரியல்ல.12.03.1998 தேதியிலிருந்து 1வது தபசில் சொத்து இந்த பிரதிவாதிகள் அனுபவத்தில் இருந்து வரும் பட்சத்தில் சுவாதீனம் பாரிகாரம் கேட்காமல் விளம்புகை பரிகாரம் மட்டும் கேட்டுள்ளது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கின் வழக்கு மூலம் கற்பனையானது என்றால் சரியல்ல. நாங்கள் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறு என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கு பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**